**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2024 ம் ஆண்டு ஜீலை மாதம் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை
(2055 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ குரோதி வருடம் ஆனித் திங்கள் 28 ம் நாள்)

**இடைநிலை மனு எண்.476/2021**
**in**
**அசல் வழக்கு எண்.170/2015**

1. ராஜலிங்கம்
த/பெ. கைலாசம் .... மனுதாரர் / கட்சி சேர்க்கப்படவேண்டிய நபர்
2. சிவலிங்கம் (இறப்பு)
த/பெ கைலாசம், .... வாதி

/ எதிர் /

1. இந்தியன் வங்கி, கோடம்பாக்கம் கிளை,
சென்னை.
2. கிருஷ்ணன்
த/பெ. வீரபோயன்
3. கலைச்செல்வன்
க/பெ. வீரபோயன்
4. சார்பதிவாளர், திருப்பத்தூர்
5. வட்டாட்சியர், திருப்பத்தூர்
6. கிராம நிர்வாக அலுவலர்,
செவ்வாத்தூர்.
7. பெத்தபோயன் (இறப்பு)
த/பெ வீரபோயன்
8. கைலாசம்
த/பெ வீரபோயன்
9. சார்ஆட்சியர், திருப்பத்தூர்
10. மாவட்ட ஆட்சியர், வேலூர்
11. ராஜகோபால் ( நீக்கம் செய்யப்பட்டுள்ளார்)
12. ராஜம்மாள்
க/பெ பெத்தபோயன்

13. ரவிச்சந்திரன்
த/பெ பெத்தபோயன்
14. சதாசிவம்
த/பெ பெத்தபோயன்
15. மோகன்
த/பெ பெத்தபோயன்
16. இந்திரா
த/பெ பெத்தபோயன்
17 அன்பு
த/பெ பெத்தபோயன்
18. ராதா
த/பெ பெத்தபோயன்
19. சிவக்குமார்
த/பெ பெத்தபோயன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக, கடந்த 14.06.2024 தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் மனுதாரர் நேரில் ஆஜராகியும், 13,14 மற்றும் 17 எதிர்மனுதாரரர்கள் நேரில் ஆஜராகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களை கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ....

## உத்தரவு

01) அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ள சிவலிங்கம் என்பவர் இறந்துள்ள காரணத்தினால், அவருடைய சட்டப்படியான பிரதிநிதியாக மனுதாரர் அசல் வழக்கினை தொடர்ந்து நடத்த அனுமதி வேண்டுமென, உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02) மனுவிற்கான பிரமாணப் பத்திரத்தின் சுருக்கம்:-**

அசல் வழக்கினை சிவலிங்கம் என்பவர் தாக்கல் செய்துள்ளார். அவர் கடந்த 09.08.2021ல், இறந்துள்ளார். திருமணம் செய்துகொள்ளாமல் இறந்துள்ள மேற்படி சிவலிங்கத்திற்கு, உடன்பிறந்த சகோதரர் என்ற முறையில் மனுதாரர் ராஜலிங்கம் சட்டப்படியான பிரதிநிதி ஆவார். ஆகையால், அசல் வழக்கினை இறந்துள்ள சிவலிங்கத்தின் சட்டப்படியான பிரதிநிதி என்ற அடிப்படையில், மனுதாரர் தொடர்ந்து நடத்த அனுமதி வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03) 13, 14, 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரைகளின் பொதுவான சுருக்கம் :**

அசல் வழக்கினை, 13, 14, 17 எதிர்மனுதாரரர்கள் மற்றும் பலருக்கு எதிராக சிவலிங்கம் என்பவர் தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது அவர், திருமணம் முடிக்காத நிலையில், காலமாகி விட்டார் என்பதும், மனுதாரர் ராஜலிங்கம் அவருடைய உடன்பிறந்த சகோதரர் என்பதும் உண்மையாகும். அசல் வழக்கினை இறந்துள்ள சிவலிங்கத்தின் சகோதரரான மனுதாரர் ராஜலிங்கம் மேற்கொண்டு நடத்துவதில், 13, 14, 17 எதிர்மனுதாரர்களுக்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

04) இம்மனுவினை பொறுத்த வரையில் மனுதாரருக்கு மனுப் பரிகாரம் கிடைக்கக்கூடியதா ? இல்லையா ? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**05) பிரச்சனைக்குரிய தீர்வு**

இருதரப்பிலும் இம்மனுவில் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்தவொரு

ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்களை கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது.

அசல் வழக்கானது உரிமைமூலம் விளம்புகை மற்றும் அடமான கடன்பத்திரம், பொதுஅதிகார ஆவணம் போன்ற ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்ற பரிகாரங்களுக்காக சிவலிங்கம் என்பவர் தாக்கல் செய்துள்ளார்.

அசல் வழக்கு விசாரணையில், வாதியால் இந்நீதிமன்றத்தில் மொத்தம் ஆறு வாய்மொழி சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.58 மற்றும் EX.x1 முதல் EX.x7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு வாய்மொழி சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு வாய்மொழி சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ள சிவலிங்கம் என்பவர் இறந்துள்ளார். திருமணம் முடிக்காமல் இறந்துள்ள மேற்படி சிவலிங்கம் என்பவருக்கு அவரது உடன்பிறந்த சகோதரரான மனுதாரர் ராஜலிங்கம் சட்டப்படியான பிரதிநிதி என்ற அடிப்படையில், அசல் வழக்கினை தொடர்ந்து நடத்த அனுமதி வேண்டுமென மனுப்பரிகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்மனுவில் 13, 14, 17 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாக தாக்கல் செய்துள்ள எதிருரைகளில் மனுவினை அனுமதிப்பது குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என கூறப்பட்டுள்ளது. மற்ற எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

மனுதாரர் இவ்வழக்கில் குறியீடு செய்துள்ள இறந்துள்ள சிவலிங்கத்தின் உறவுமுறை சான்றிதழான ம.சா.ஆ.1 ஆவணத்தில்,

இறந்துள்ள சிவலிங்கம் திருமணம் முடிக்காமல் இறந்துள்ளதும், அவருக்கு மனுதாரர் உடன்பிறந்த சகோதரர் என்பதும் உண்மையென கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்கள் சான்று வழங்கியுள்ளனர்.

இச்சூழ்நிலையில், இறந்துள்ள சிவலிங்கத்தின் உடன்பிறந்த சகோதரரான மனுதாரர் ராஜலிங்கத்தை, இறந்துள்ள சிவலிங்கத்தின் சட்டப்படியான பிரதிநிதி என்ற அடிப்படையில், அசல் வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதி வழங்குவதால் எந்தவொரு சட்டப்படியான தவறும் இல்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், மனுப்பிரச்சனை அதனடிப்படையில் இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

06 ) **முடிவில்,** மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024ம் ஜீலை மாதம் 12ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

B RAJA
Digitally signed by B RAJA
Date: 2024.07.12 12:56:39 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :-**

இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

ம.சா.ஆ.1 – இறந்துள்ள சிவலிங்கத்தின் உறவுமுறை சான்று.

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

இல்லை

B RAJA
Digitally signed by B RAJA
Date: 2024.07.12 12:56:49 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.